யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

# லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப்பேருரை.

பேராசிரியர்

வ. அய். சுப்பிரமணியம்

துணைவேந்தர் - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# LADY LILAVATI RAMANATHAN MEMORIAL LECTURE

PROFESSOR

**V. I SUBRAMONIAM**

Vice - Chancellor, Tamil University, Tanjore.

*1984 பெப்ரவரி 10*

10 February 1984

370.5489
CUP
PB


# லீலாவதி இராமநாதன் பெருமாட்டி

சேர். பொன்னம்பலம் இராமநாதன் சிறந்த அரசியல் வாதியாகவும், கல்விமானாகவும், சமயப்பற்றுள்ளவராக வும், கலை கலாசாரத்தைப் பேணி வளர்ப்பவராக வும் விளங்குவதற்கு மனையறத்தின் வேரணையராக விளங்கியவர், பெருமாட்டி லீலாவதி இராமநாதன் ஆவர். அவருடைய உயர்ந்த இலட்சியங்களும், கொள்கைகளும் அவருடைய துணைவியாரால் நிறைவு பெற்றன. ஒருவர் புகழுடனும், சகல சிறப்புகளுட னும் விளங்குவதற்கு மாண்புமிக்க இல்லாள் கார ணம் என்றால் மிகையில்லை. ஒரு நாட்டிற் பிறந்து வேறு ஒரு நாட்டில் வளர்ந்து இறுதியாக இலங்கை வாழ்சைவமக்களுடைய முன்னேற்றத்துக்காகப் பணி யாற்றிய பெருமை அம்மையாருக்குரியது.

இங்கிலாந்தில் யோக்சயர் என்ற இடத்தைச் சேர்ந்த செல்வி R. L. ஹரிசனுடைய முன்னோர், 19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவுஸ்திரேலியா விற் குடியேறி வாழ்ந்தனர். அவருடைய பெற்றோர் மிகவும் உயர்ந்த பண் பாடும் செல்வச் சிறப்பும் மிக்கவர்கள். செல்வி R. L. ஹரிசன் அவர்களுக்குப் பொருட் செல்வத்திலும் பார்க்க அருட்செல்வத்தில் அதிக நாட்டம் இருந்தது. சமயத்தை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்து, உண்மையை அறியும் ஆர்வத்தால் ஞானிகளைத் தேடி, கீழைத்தேசங்களுக்கு வந்த செல்வி R. L. ஹரிசன், சேர். பொன் இராமநாதனைச் சந்தித்தார், சேர். பொன். இராமநாதனிடம் குரு சிஷ்ய முறையிற் சமயத்தைக் கற்க ஆரம்பித்து, முதலிலே விவிலிய நூலை ஆராய்ந்து சில நூல்களை வெளியிட்டார். வழமையாக மேற்கு நாட்டவர்களைக் கவரும் இந்து தத்துவம், சமய இலக்கியம், வடமொழி என்பன இவரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. நமது இந்து சமயக் கோட்பாடுகளைப் பிறநாட்டவர் போற்றிக் கைக்கொள்ளும் வண்ணம் சமய இலக்கியங்களை ஆங்கிலத்தில் எழுதி வெளி யிட்டார்.

செல்வி R. L. ஹரிசனுடைய அறிவு, ஆற்றல், காரணமாக சேர். பொன். இராமநாதன் அம்மையாரைத் தமது அந்தரங்கச் செயலாளராக நியமித்தார். சேர். பொன். இராமநாதன் அவர்கள் சமயச் சொற்பொழிவாற்ற அமெரிக்கா

( தொடர்ச்சி பின் உள் அட்டையில் )



லீலாவதி இராமநாதன் பெருமாட்டி

LADY LILAVATI RAMANATHAN

UNIVERSITY OF JAFFNA
RECEIVED
1986-10-21
LIBRARY

மதநெறி ஆய்வில் புதிய திருப்பம்

P1190

## பொருளடக்கம்

1. அறிமுகவுரை
2. முன்னுரை
3. இந்திய தத்துவக்கூறு
4. கோயில்களின் கூறுகள்
5. செயற்படும் மதம்
6. செயற்பாட்டு மத ஆய்வு நெறி
7. பல்கலைக்கழக அளவீடு
8. கிடைத்த செய்திகளின் விவரம்
9. பட்டியல் விளக்கமும் ஊகமும்
10. பெருந்தொகைத் தெய்வங்கள்
11. ஊர்த் தெய்வக் கூறுகள்
12. ஊர்த் தெய்வங்களின் வகை
13. ஊர்த் தெய்வப் பெருக்கம்

# அறிமுகவுரை

**பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்**
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்களே!**

தலைமைசேர் பெருமக்களே!

இன்று நாம், புதிதாகத் திறக்கப்பட்டுள்ள கைலாசபதி கலையரங்கத்தில், நமது பல்கலைக்கழகத்தின் வருடாந்தப் புலமை நடவடிக்கைகளில் ஒன்றான 'இராமநாதன் சீமாட்டி நினைவுச் சொற்பொழிவு'க்காகக் குழுமியுள்ளோம்.

சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மனைவியாக இங்கு வந்த இந்த ஆங்கில நாட்டுப் பெண்மணியை நாம் தலைசிறந்த ஒரு வாழ்க்கைத் துணையாகவே அறிந்துள்ளோம். ஆனால் அவரது ஆளுமை, பொன்னம்பலம் இராமநாதன் அவர்களது சமூக முன்னேற்ற முயற்சிகளுக்கு எவ்விதங்களில் உந்து சத்தியாக அமைந்ததென்பதனை நன்கு அறியோம். இராமநாதன் சீமாட்டி, தமது திருமணத்திற்குமுன் மேற்கொண்டிருந்த சமூக அரசியல் நடவடிக்கைகளை நோக்கும் போது, இராமநாதன் அவர்களின் மிதவாத நடவடிக்கைகள் பலவற்றிற்கு அவர் காரணராக இருந்திருக்க வேண்டுமென்று கருதுவது நிச்சயம் தவறாகாது.

பொன்னம்பலம் இராமநாதனின் மனைவியாகிய, லேடி இராமநாதன் என்று எம்மால் இன்று நினைவு கூரப்படும் செல்வி ஆர். எல். ஹரிசன் (Miss. R. L. Harrison), இராமநாதனைத் திருமணம் செய்ய முன்னர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கூற்றில் இங்கிலாந்தில் சோசலிசமுயற்சிகளில் ஈடுபட்டிருந்த "ஃபேபியன் சொசைட்டி" (The Fabian Society) யில் முக்கிய இடம் பெற்றவர். பின்னர் பிரம்ம ஞானசபையில் (Theosophical Society) அங்கத்தவராக இருந்தவர். தென்னிந்தியர்விலும் தென்னிலங்கையிலும் இச்சபை ஏற்படுத்திய கருத்து நிலைமாற்றங்கள் எமக்குத் தெரிந்தவையே.

இத்தகைய பெருமைகள் பொருந்திய பெண்மணி பற்றித் திட்டவட்டமான ஒரு வாழ்க்கை வரலாறு இருப்பது அவசியம். பெண்களின் ஈடுபாடுகளுக்கும் புலமை முயற்சிகளுக்கும் நமது சான்றோர் வழங்கிய இடத்தினை அறிவதற்கு இந்த ஆங்கிலப் பெண்மணியின் வரலாறு உதவும். பல்கலைக்கழகப் படிப்புக்குப் பெருந்தொகையான பெண்கள் கவரப்படும் இந்நாட்களில் இத்தகைய ஒரு வரலாறு பயனுள்ளதாக அமையும். இந்துமகளிர் கழகம் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் உதவியைப் பெற்றுத்தருவது நமதுகடன் என்ற வாக்குறுதியையும் தருகின்றேன்.

நிற்க,

அன்பர்களே!

இராமநாதன் சீமாட்டி நினைவுப் பேருரையை வழங்க வந்துள்ள பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்களை அறிமுகஞ் செய்வது எனது இன்பக் கடனாகின்றது.

பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்பது எமக்குத் தெரிந்ததே. எனது அறிமுகம் அந்தப் பதவிநிலை பற்றியதன்று. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக்கப்படும் திறமைக் கணிப்புக்கும் புலமை மரியாதைக்கும் பின்புலமாக அமைந்த அவரது சாதனைகள் பற்றியும், சிறிது எடுத்துக் கூறல் அத்தியாவசியமாகின்றது.

பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் கேரளப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளைக்குப் பின்னர், அப்பல்கலைக்கழகத்திலுள்ள அழகப்பச்செட்டியார் நன்கொடைப் பேராசிரியத் தவிசினை 1954-ல் ஏற்று, தமிழிலக்கிய ஆராய்ச்சிக்கு வேண்டிய விஞ்ஞான பூர்வமான மொழியியற் பயில்வுத்தளத்தினை நிறுவினார். சங்க இலக்கியங்களை மொழியியல் நெறிப்படி அட்டவணைப் படுத்தி அவற்றின் அமைப்பு நெறியினை விளக்கும் பணியினைத் தொடக்கி வைத்தார். தமிழ்ப் பேராசிரியர் பதவியைவிடுத்து, மொழியியற் பேராசிரியராகப் பதவியேற்ற பின்னரும் இப்பணியினைத் தொடர்ந்து, ஆனால், பரந்த அடிப்படையில் நடத்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கேரளப்பல்கலைக்கழகத்தை அடியொற்றியே புதிய மொழியியல் ஆய்வுகளை வகுத்துக்கொண்டது.

பேராசிரியர் சுப்பிரமணியத்தின் கீழ்ப் பயிற்சி பெற்றோரே இன்று அண்ணாமலை, மதுரைப் பல்கலைக்கழகங்களில் மொழி இலக்கிய ஆராய்ச்சிகளை வழி நடத்துவோராயுள்ளர்.

பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் மொழியியல் துறைப் பேராசிரியராக ஆற்றியுள்ள மிகப் பெரிய பணி, திராவிடமொழியியலாய்வினை நிறுவன நிலைப்படுத்தியமையாகும். திராவிட மொழிகளின் ஒருமைப்பாட்டையும் ஊடாட்டங்களையும் நிறுவுவதற்கும், அனைத்திந்திய மட்டத்திலும், அதனைத் தொடர்ந்து அனைத்து நாடுகள் மட்டத்திலும் இம்மொழிகளின் செல்வாக்கு, செயற்பாடு ஆகியவற்றை அறிவதற்கும், திராவிட மொழியியற்கழகம் வழியாக ஆராய்ச்சிப் பணியை வகுத்துள்ளார். தமிழ் நாடு, கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களின் அரசு உதவியுடன், ஆனால் புலமைச் சுதந்திரத்துடன், இயங்கும் இக்கழகம் பேராசிரியர் சுப்பிரமணியத்தின் அனைத்திந்திய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் அவரது ஞானக்குழந்தை எனலாம்.

பேராசிரியர் சுப்பிரமணியம் ஆழ்ந்தகன்ற கல்விஞானமும் உலகஞானமும் உடையவர்; மரபினை ஊன்று கோலாகக் கொண்டு புதுமையைக் கண்டவர். இந்தப் பண்புகள் காரணமாகவே தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராவதற்குக் கேரளத்திலிருந்து தமிழகத்திற்கு அழைக்கப்பட்டார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றி மூன்று வருடங்களாகின்றன. இந்தக் குறுகிய கால எல்லையில் அவர் அங்கு சாதித்தவற்றை நோக்கும் போது, பெரும் பிரமிப்பே ஏற்படுகின்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தை, தமிழ்நாட்டின் பட்டதாரி உற்பத்தி நிலையங்களில் பத்தொடு பதினொன்றாக ஆக்காது தமிழ் ஆராய்ச்சியின் பெரு மைய மாகக் கட்டிஎழுப்பியவர்; தமிழாய்வு என்பது இலக்கண, இலக்கிய கலை ஆய்வுகளே என்ற வரையறையைத் தகர்த்து விஞ்ஞானம், மருத்துவம், கட்டிடக் கலை, சமுகவியல் முதலிய துறைகளையும் உள்ளடக்கி, தமிழின்-தமிழரின்-எதிர்கால வளர்ச்சிக்கான சிந்தனை மையமாக அமைத்துள்ளார். உலகில் வாழும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரது சிந்தனைத் தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் அகன்றதாகவும், தமிழரின் பன்முகப் பாடான வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஆழமானதாகவும் அப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிர்வகிக்கும் முறையில் அது மிகவிரைவில் உலகளாவிய பெருந் தமிழ் நிறுவனமாக மிளிரும் என்பது திண்ணம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் செனட் சபையில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு கடல் கடந்த தமிழியலாளன் என்ற வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் எமது பல்கலைக்கழகத்திற்கும் உள்ள உறவுகள் பற்றிச் சிறிது எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ் நாட்டின் மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஆய்வாளர் பதவிகளை வழங்கியும், இளநிலையோருக்கு ஆய்வுதவி வழங்கி யும் வருகிறது. இத்தொடர்புகள் விரைவில் புலமை நெறிப்பட அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எம்மோடு தொடர்புடைய இச்சிறந்த அறிஞர், இன்று எம்மிடையே இருப்பது எமக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகின்றது.

பேராசிரியர் சுப்பிரமணியத்தின் சிறந்த புலமைஉருவினைக்காண, அதில் ஈடுபட, வழிவிடுகின்றேன்.

பேராசிரியர் கலாநிதி வடசேரி அய்யம்பெருமாள்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களை "மதநெறி ஆய்வில் புதிய திருப்பம்" என்னும் பொருள்பற்றி அவரது உரையை நிகழ்த்துமாறு இப்பொழுது அழைக்கின்றேன்.

## முன்னுரை :

பெருமாட்டி இராமநாதன் மகளிர் கல்விக்கும், மத நெறி விளக்கத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் பெயர் பெற்றவர். இவையனைத்தையும் விட இவர் அயல்நாட்டிற் பிறந்து, அயற் பண்பாட்டில் வளர்ந்து இலங்கைத் தமிழர் பண்பாட்டைத் தமதாகக் கொண்டு 'தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசான்ற சொற்காத்து சோர்விலா'ப் பெருநிறைச் செல்வியாக விளங்கியவர். அவர் பெயரால் நிறுவிய அறக்கட்டளை ஆய்வுரையை ஆற்றுமாறு என்னையழைத்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு மிகவும் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். பெருமான் இராமநாதனும், பெருமாட்டி இராமநாதனும் மதப் பிடிப்பால் உந்தப்பட்டு அதனைப் பரப்ப அரும்பாடுபட்டுப் பெரும்புகழ் எய்தினர். மதநெறி பற்றிய என்சொற்பெருக்கும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கடமையால் உருவாக்கப்பட்டது.

## இந்திய தத்துவக் கூறு :

உலகுக்கு இந்தியா வழங்கிய பண்பாட்டுக் கூறுகளில் மதச் சிந்தனை முதலிடம் பெறுகின்றதென்றால், இந்திய மதச் சிந்தனை வளர்ச்சிக்குத் தமிழகத்தின் பங்கு கணிசமானது.

சைவ சித்தாந்த நெறியும், வைணவ சித்தாந்த நெறியும் தமிழகத்தில் தோன்றின. அவற்றின் அடிப்படைச் சாத்திர நூற்களும், தோத்திர நூற்களும் தமிழில் உருவாகின. இந்திய மதச் சிந்தனை வளர்ச்சிக்கு இவை தமிழ் மொழி தந்த நல்கைகள். கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை பக்திவழி தமிழகத்தில் உருவெடுத்துப் பேரியக்கமாகப் பிற தென் மாநிலங்களிலும், வட இந்தியாவிலும் பரவியது. கர்நாடக நாட்டு வீரசைவ மதம், தமிழில் எழுதிய சைவ சித்தாந்த சாத்திரங்களையும், தேவாரத்தையும் அடிப்படை நூற்களாகக் கொள்கின்றது. ஆந்திரப் பிரதேசத்திலும், ஒரிசாவிலும் பரவியிருந்த வைணவ சித்தாந்தம் நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தை ஆதார நூலாகக் கொள்வதும் நாம் அறிந்ததே. பக்தியியக்கத்தின் பின்னர் வானளாவிய கோயில்களும் அவற்றைச் சார்ந்த மடங்களும் மதப்பிடிப்பை வளர்த்தன. தென்னக சங்கரர், இராமானுசர் போன்றோர் வேத நெறியையும், சமஸ்கிருத அறிவையும் பரப்பினர். ஞானசம்பந்தர் மடம், தருமபுர மடம், திருநாவுக்கரசர் மடம், வீரசைவ, வைணவ மடங்கள் முதலிவை நிறுவனஅடிப்படையில் மதச் சிந்தனையையும், கோயில் வழிபாடு, பராமரிப்பு முதலியவற்றையும் காத்து வந்தன; தமிழையும் வளர்த்தன. சைன மடங்களும், புத்த விகாரங்களும் தத்தம் மதங்களைப் பரப்புதற்கும் காத்தற்கும் சிறப்புடன் இயங்கிப் பின்னர், தமிழகத்தில் வலுவிழந்து அழிந்துவிட்டன.

கோயில்களும், மடங்களும் மதச் சிந்தனைக்கும், மதப் பரப்பிற்கும், வளர்ச்சிக்கும் துணை நின்றது போன்று, அரச ஆட்சிக்கு அனுசரணையாகச் செயற்பட்டு ஆட்சிக் கருவியாக மாறின.

வலுவான மன்னர்களும், மன்னரைச் சார்ந்தோரும் மான்யமாக நிலமும், பொன்னும், வெள்ளியும், விலையுயர்ந்த ஆபரணங்களும், பொற்காசுகளும், கோயில்களுக்கும், மடங்களுக்கும் வழங்கினர். பிறமொழி பேசும் நாயக்க மன்னர்களும், தஞ்சை மராட்டிய மன்னர்களும் தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெற, கோயில் மான்யங்களைக் கருவியாகப் பயன்படுத்தியதற்கு வரலாற்றுச் சான்றுகள் மிகப்பல. எனவே, அரசு ஒப்புதல், ஆட்சி ஒப்புதல் ஆகியவற்றைப் பெறுதற்குக் கோயில்கள் மடங்கள் ஆகியவற்றிற்கு அரசர்களும், அரசரைச் சார்ந்தோரும் கொடையளித்துப் போற்றினர்.

மாமன்னர்கள் வலுவிழந்த காலத்தில் மடங்களும், பொதுமக்கள் சபைகளும் கோயிலைப் பராமரித்தன.

**கோயில்களின் கூறுகள் :**

பெருந்தெய்வக் கோயில்கள் தலைநகரங்களிலும், வயல் சார்ந்த நகரங்களிலும், வாணிபப் பட்டினங்களிலும் தென்னகத்தில் உருவாயின. இத்தகைய கோயில்களில் (1) வேத மந்திரமறிந்த பிராமணர் பூசை செய்தனர். (2) கோயில்களனைத்தும் கருங்கல்லாலும், செங்கல்லாலும் எழுப்பப்பட்ட கோபுரம், பிரகாரம் முதலியவற்றை உடையவை. (3) வடகரைத் தெய்வங்களே இவற்றின் முதல் தெய்வங்களாயின. (4) நிலமாகவும், பொற்காசுகளாகவும் மான்யம் பல பெற்றன. (5) முக்கால பூசையும் உண்டியும், ஏனைய படையலும் முதல் தெய்வமும், சார்புத் தெய்வங்களும் பெறலாயின. (6) தேரோட்டம், தெப்பம் முதலிய விழாக்கள் உட்பட பல விழாக்களை உடையன. (7) பல பணியாளர்களைப் பூசைக்கும் (இவர்கள் அனைவரும் பிராமண குலத்தோர்) கோயிற் காப்புக்கும் (கணக்கர், நிலவிளைவுகளை வசூலிப்போர், வாகனம் சுமப்போர், மாலை கட்டுவோர், ஆடு, மாடு மந்தை காப்போர், இசைக்கருவி இயக்குநர், ஓதுவார், பாடுவார், துப்புரவுத் தொழிலாளர், எண்ணெயாட்டுபவர், உடை தயாரிப்போர், காவலர், செருப்புத் தைப்போர், ஆசிரியர்கள், தேவதாசிகள் முதலிய ஊழியர்கள்; இவர்களின் மிகப் பெரும்பாலோரும், பிராமணர் அல்லாத உயர்சாதியினரும், நடு, கீழ்ச்சாதியினரும் ஆவர்.) ஊழியர் பலரை நியமித்து இருந்தன. வடகரைத் தெய்வங்கள் முதல் தெய்வமாகவும், அந்தணர் வேத மந்திர உச்சாரணத்தாலும், அக்ரகாரம் நிறுவும் மான்யத்தாலும் வடகரை மதச்சிந்தனை கோயில்வழி பரவின. ஏனைய ஊழியர் ஊதியம் பெறக் கோயிலை நம்பி வாழ்ந்தனர். இலவச ஊண், கல்வி முதலியவற்றால் ஏனையோரிடமும் கோயிலின் செல்வாக்குப் பரவியது. நீதி வழங்கல், பொருட்கடன், கொடை, நிலம் விற்றல், வாங்கல் முதலியவற்றால் ஊர்மக்கள் கோயிலைச் சார்ந்து தமது வாழ்க்கையை அமைக்க நேர்ந்தது. அரசியற் கருவியாகவும் சமுதாயக் கருவியாகவும் கோயில் செயற்பட்டது.

மதநெறி, தத்துவம் ஆகியவற்றின் ஆய்வில் நேர்ந்துள்ள திருப்பு மையங்களை நாமறிதல் நன்று.

வேதங்கள், உபநிடதங்கள், ஆரண்யகங்கள் ஆகியவற்றை இணைத்து வடகரைத் தத்துவம் உருவானது. புத்தனின் தம்மபதத்தை அடிப்படையாகக் கொண்டு புத்த தத்துவம் வளர்ந்தது. சைன இலக்கிய அடிப்படையில் சைன தத்துவ நெறியும், தேவார திருவாசகம் போன்ற திருமுறைகளால் சைவசித்தாந்தமும், நாலாயிரத்தின் ஆழ்ந்த படிப்பால் வைணவ சித்தாந்தமும் உருப்பெற்றன. பண்டைய மத இலக்கியங்கள், தெய்வ அருள் பெற்றோரின் அருளிச் செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சிந்தனையாளர்கள் தத்துவங்களை உருவாக்கினர். அவர்களுக்குத் தர்க்கமும் உயர்ந்தோர் வாக்குகளும் ஆதாரமாக அமைந்தன. ஆனால் இத்தகைய முயற்சிகள் அனைத்தும் உயர்மட்ட மக்களை மட்டும் பாதித்தன. கோயில் வழிபாட்டை அவர்கள் ஆன்ம திருப்திக்கும் வாழ்க்கை வளத்திற்கும் ஏற்றனர்.

## செயற்படும் மதம் :

கீழ்மட்டத்திலுள்ள பெரும்பாலோர்க்கு உயர்மதம் பயன்பட்டதா என்பது ஐயத்திற்குரியது. அவர்களிற் பெரும்பாலோரும் மனித வாழ்வில் அன்றாடம் எழும் சிக்கலைத் தீர்க்கத் தெய்வ உதவியை நாடினர். ஊர்த் தெய்வங்கள் முதலிய பலதர தெய்வ வணக்கங்களால் மன அமைதியும், வாழ்வுச் சிக்கலுக்குத் தீர்வும், தெளிவும் பெற்றனர். அவர்கள் நடைமுறைப்படுத்திய மதநெறியை ஆய்ந்து அதனடிப்படையில் தத்துவ நெறி ஒன்று இது வரை உருவாகவில்லை. இவ்வாறு உருவாகும் தத்துவம், செயற்பாட்டுத் தத்துவமாக, மக்கள் தத்துவமாக உருப்பெறும். முன்னது, மத அறிஞர்கள் எழுத்துருக்கள் அடிப்படையில் தோற்றுவித்த தத்துவ நெறிமுறை என்றால் பின்னது, மக்கள் அன்றாடம் மேற்கொள்ளும் வணக்க முறைகள், ஊர்த் தெய்வ வழிபாடுகள் முதலியவற்றின் அடிப்படையில் உருவாகும் செயற்பாட்டுத் தத்துவமாகும். முன்னது உருவாக்கிய அறிஞரின் கல்வி வளத்திற்கேற்ப திரியும்; மாறும். ஒவ்வொரு மதத்திலும் பல உட்பிரிவுகள் ஏற்பட்டதற்கு இது ஒரு காரணம். பொதுமக்கள் உடன்பாட்டுடன் நடக்கும் வழிபாடுகளின் அடிப்படையில் செயற்பாட்டுத் தத்துவம் உருவாவதால், அவற்றில் உட்பிரிவுகள் ஏற்படுவது எளிதன்று. சன சம்மதமின்றி அவை நிறைவேறுவது இயலாது. முன்னது உயர்தனி (கிளாசிக்கல்) நெறி; பின்னது பொது அல்லது நாட்டு (ஃபோல்க்) நெறி. இரண்டாவது முறையில் தென்கரைத் தெய்வங்கள், அவர்களைப் பற்றிய சிந்தனைகள், வழிபாட்டுக் கூறுகள், பண்பாட்டுப் பிரிவுகள் முதலியவற்றை நாம் தெரிந்து திராவிட – தமிழ்ப் பண்பாட்டை மீட்டுருவளிக்க இயலும். முன்னது வடகரையிலே தோன்றி, தென்னகத்தில் மேல்மட்ட மக்களிடையே பரவியது. கீழ் மட்ட மக்களிடையே அவை பரவின என்று கூற இயலாது.

சுருக்கமாகக் கூறினால்

## உயர்மதம் :

உருவாக்கியவர்கள் மதச் சிந்தனையாளர்கள்.

பரவியுள்ளது உயர்மட்டர்.

தெய்வங்கள், வடகரையிலுள்ளவை.

அடிப்படை நூற்கள் சமஸ்கிருதம், பிராகிருதம், பாளி, தமிழ், கன்னடம்.

**செயற்பாட்டு மதம் :**

இனிமேல் தான் ஆய்வாளர்கள் உருவாக்க வேண்டும்.

பரவியுள்ளது கீழ்மட்டம்.

தெய்வங்கள் தென்கரையிலுள்ளவை.

அடிப்படைக் கள ஆய்வும், பாரம்பரியச் செய்திகளும்.

## செயற்பாட்டு மத ஆய்வு நெறி :

ஊர் மக்கள் வழிபடும் தெய்வங்களைப் பற்றி வைட்கெட்டும்[1] கில்பர்ட் ஸ்லேட்டரும்[2] நூல் செய்துள்ளனர். அவர்கள் காலத்தில் அந்நூற்கள் பலராற் பாராட்டப்பட்டன. எனினும் இத்துறையில் நம்பகமான அளவீடுகள் எவையும் குறிப்பிடத்தக்க அளவில் அண்மைக்காலம் வரை நடைபெறவில்லை. இந்திய மக்கள் தொகைக் கணக்கீட்டு அலுவலகம் இத்தகைய முயற்சி ஒன்றைச் செய்தது. ஆனால், அதுவும் எடுத்துக் காட்டுகளால் தனது கருத்தை விளக்கியதே ஒழிய விரிவாகவும் நுணுக்கமாகவும் செய்யவில்லை. விரிவான கள ஆய்வால், தெளிவாகாத பல துறையறிவு தெளிவு பெறும் என்ற எண்ணத்தில் தமிழ்ப் பல்கலைக் கழக விரிதமிழ் இயக்ககம் இரு மாவட்டங்களில் (தஞ்சை, கோயம்புத்தூர்) தெய்வ வழிபாட்டுமுறை அளவீட்டை மேற்கொண்டது.

**பல்கலைக்கழக அளவீடு :**

1983-ம் ஆண்டு மார்ச்சு மாதம் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களைப் பயன்படுத்தி தஞ்சை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் வினாப்பட்டியல்வழி அளவீடு ஒன்றை, தமிழ்ப் பல்கலைக் கழக விரிதமிழ் இயக்ககம் செய்து முடித்தது. அந்த வினாப்பட்டியலில் ஊர்த் தெய்வங்கள், பெருங் கோயில்கள், பிறமதப்பள்ளிகள், அவற்றின் அமைப்பு, விழாக்கள், கொடைகள் முதலியன இடம்பெற்றிருந்தன. ஏறத்தாழ 2300 ஊர்களில், முழுமித்த வினாப்பட்டியலிற் கண்ட செய்திகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பு மையம், வகை செய்தது. ஊர்மக்கள் நடத்தும் தெய்வ வழிபாடு பற்றி, நம்பகமான களஆய்வுச் செய்தி முதன்முறையாக இப்போதுதான் கிடைத்துள்ளது. தெய்வங்களைப் பிராமணத் தெய்வங்கள், பிராமணர் அல்லாதார் தெய்வங்கள் என்ற இருபிரிவாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் ஆண், பெண் என்று முதலில் சிறு பிரிவு செய்யப்பட்டுள்ளது. பிராமணத் தெய்வங்கள் என்று கூறும்போது, கோயிற் பூசை செய்பவர்கள் பிராமணர்கள் என்ற பொருளில் இங்கே பயன்படுத்தப்படுகிறது. பிராமணர் அல்லாதார் ஏனைய கோயில்களிற் பூசை செய்வதால் பிராமணரல்லாதார்கோயில் என்று குறிக்கப்படுகிறது.

**கிடைத்த செய்திகளின் விவரம் :**

இரு மாவட்டங்களில் ஆண் பெண் தெய்வங்களின் எண்ணிக்கை மேற்குறிப்பிட்ட இரு நிலைகளிலும் தரப்பட்டிருக்கிறது.

## தஞ்சை மாவட்டம்

| | பிராமணத் தெய்வங்கள் | | பிராமணர் அல்லாதார் தெய்வங்கள் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| **தஞ்சை** | | | | |
| சீர்காழி | 105 | 19 | 162 | 170 |
| பொறையாறு | 124 | 18 | 109 | 89 |
| மயிலாடுதுறை | 309 | 23 | 284 | 211 |
| திருவிடைமருதூர் | 87 | 31 | 359 | 236 |
| கும்பகோணம் | 214 | 33 | 384 | 200 |
| நன்னிலம் | 169 | 9 | 227 | 200 |
| நாகை | 93 | 10 | 192 | 143 |
| திருவாரூர் | 143 | 20 | 310 | 229 |
| குடவாசல் | 180 | 18 | 296 | 236 |
| பாபநாசம் | 374 | 97 | 630 | 410 |
| திருவையாறு | 237 | 24 | 265 | 139 |
| தஞ்சாவூர் | 188 | 50 | 321 | 205 |
| ஒரத்தநாடு | 72 | 15 | 206 | 106 |
| மன்னார்குடி | 203 | 40 | 230 | 257 |
| நீடாமங்கலம் | 77 | 16 | 120 | 101 |
| வேதாரண்யம் | 281 | 30 | 310 | 222 |
| பட்டுக்கோட்டை | 167 | 25 | 318 | 249 |
| மொத்தம் | 3023 | 478 | 4723 | 3403 |

முழு மொத்தம் : 11,627

## கோவை மாவட்டம்

| கோவை | பிராமணத் தெய்வங்கள் ஆண் | பிராமணத் தெய்வங்கள் பெண் | பிராமணர் அல்லாதார் தெய்வங்கள் ஆண் | பிராமணர் அல்லாதார் தெய்வங்கள் பெண் |
|---|---|---|---|---|
| மேட்டுப்பாளையம் | 43 | 8 | 66 | 66 |
| அவினுசி | 540 | 20 | 189 | 298 |
| கோவை | 308 | 64 | 270 | 320 |
| பல்லடம் | 207 | 29 | 300 | 286 |
| பொள்ளாச்சி | 263 | 69 | 191 | 214 |
| உடுமலைப்பேட்டை | 199 | 53 | 143 | 261 |
| திருப்பூர் | 7 | 9 | 17 | 14 |
| மொத்தம் | 1567 | 252 | 1176 | 1459 |

முழு மொத்தம் : 4,454.

**பட்டியல் விளக்கமும் ஊகமும் :**

இரு மாவட்டங்களில் தஞ்சை மாவட்டம் கோயம்புத்தூரை விடத் தெய்வப் பெருக்குடையது. பிராமணத் தெய்வங்களில் ஆண் தெய்வ எண்ணிக்கை பெண் தெய்வ எண்ணிக்கையைவிட மிகக்கூடுதல். ஆறு ஆண் தெய்வத்திற்கு ஒரு பெண் தெய்வம் என்ற விகிதத்திலிருக்கின்றன இருமாவட்டங்களும் இதில் ஒத்திருக்கின்றன. பிராமணரல்லாத தெய்வங்களில் ஆண் பெண் விகிதம் தஞ்சையில் ( 1:7 ) கோயம் புத்தூரில் ஆண் தெய்வத்தை விடப் பெண் தெய்வம் விகிதத்தில் கூடுதல் ( 1 : 3 ). தென்னக ஊர்த் தெய்வங்களில் பெண்களின் எண்ணிக்கை கூடுதல் என்பதை வைட் கெட்டும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தஞ்சையில் பெண் தெய்வ எண்ணிக்கை சற்றுக் குறைவாகவே இருக்கிறது. பிராமண தெய்வங்களில் ஆண் சார்பு இரு மாவட்டங்களிலும் வைட்கெட் கூறியது போன்று கூடுதலாக இருக்கிறது. திராவிட மதச் செல்வாக்கால் புத்தமும் சமண மதமும் பெண் தெய்வ வணக்கத்தை மேற் கொண்டன என்று ஆர். என். நந்தி[3] கூறுகிருர்.

**பெருந்தொகைத் தெய்வங்கள் :**

பெருமெண்ணில் வணங்கப்படும் தெய்வங்களைத் தஞ்சையிலும் கோவையிலும் வரிசைப்படுத்திய போது :

| | தஞ்சை | கோவை |
|---|---|---|
| விநாயகர் / பிள்ளையார் | 2233 | 1593 |
| மாரியம்மன் | 1370 | 714 |
| காளியம்மன் | 1123 | 74 |
| சிவன் | 984 | 2 |
| ஐயனார் | 832 | 6 |
| முனியப்பன் ( முனியாண்டவர் ) | 219 | 49 |
| துரௌபதி அம்மன் | 167 | 1 |
| ஆஞ்சநேயர், அனுமார் | 201 | 3 |
| சுப்பிரமணியன் / பழனியாண்டி / முருகன் | 201 | 106 |
| பெருமாள் | 96 | 23 |
| மதுரை வீரன் | 67 | 172 |

பெருந்தொகைத் தெய்வங்களைப் பற்றிய கணக்கெடுப்பை நோக்கினால், இரு மாவட்டங்களில் பெரும்பாலாக வணங்கப்படும் தெய்வம் விநாயகர் பிள்ளையார், மாரியம்மன், சுப்பிரமணியர், ( பழனியாண்டவர், முருகன் ) என்பது தெரியவரும்.

தஞ்சையில் கூடுதல் எண்ணிக்கையிற் காணுந் தெய்வம் காளியம்மன்; எண்ணிக்கை 1123, கோவை 74; சிவன், தஞ்சையில் 984, கோவை 2; அய்யனார், தஞ்சையில் 832, கோவை 6; முனியாண்டவர் ( முனியப்பன் ), தஞ்சையில் 219, கோவை 49; பெருமாள், தஞ்சையில் 96, கோவை 23; மதுரை வீரன், தஞ்சையில் 67, கோவை 172; துரௌபதி, தஞ்சையில் 167, கோவை 1; துர்க்கை, தஞ்சையில் 19, கோவை 7.

ஊர்த் தெய்வக் கூறுகள் :

ஊர்த் தெய்வங்களின் பூசாரி, பிராமணரல்லாதாராய் இருப்பர். சிலவேளை பூசையைப் பரம்பரையாக முதிபவர்கள் செய்து வருவர். அல்லது கணியான், வண்ணான் முதலியவர்கள் செய்வர். நிரந்தரக் கோயில் குறிப்பாகக் கல்லால் ஆன கோயில் ஊர்த் தெய்வத்துக்கு இரா. நிரந்தர வருவாய் இராது. நோய், பீடை, மழையின்மை, பஞ்சம் முதலியவை தொல்லை தரும் காலத்தில் வழிபாடு நடக்கும். ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட்களில் கொடை, படையல் முதலியவை நடப்பது அரிது. உயிர்க் கொலை, வழிபாட்டு முறையில் முன்னர் இடம்பெற்றிருந்தது. ஆங்காங்கே இன்னும் அருகி நடந்து வருகிறது. ஆடல், பாடல் உண்டு. தெய்வமேறி ஆடும் கோமரத்தாடிகள் உண்டு. நல்வாழ்விற்காக நன்றி தெரிவித்தற்காக காப்புக்காக ஊர்த் தெய்வ வணக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது.

ஊர்த் தெய்வங்களின் வகை :

தனியார் வணங்கும் குடும்பத் தெய்வங்கள்,

சாதி ( சமுதாயத்தின் ) வணங்கும் தெய்வங்கள்,

ஊர்த் தெய்வங்கள்,

வட்டாரத் தெய்வங்கள்,

மாநிலத் தெய்வங்கள்,

பெருஞ் செல்வாக்குடைய தெய்வங்கள்

என, வணங்கும் மக்களடிப்படையில் வகை செய்ய இயலும்,

இதைப் போன்றே ஒவ்வொரு தெய்வத்தின் அருள்வள அடிப்படையிலும், வகைப்படுத்த முடியும்.

ஊர்த் தெய்வப் பெருக்கம் :

ஊர்த் தெய்வங்கள் எவ்வாறு எண்ணிக்கையிற் பெருகின என்ற வரலாற்றுமுறை ஆய்வு ஆரம்ப நிலையிலே தான் இன்னும் இருக்கின்றது. (1) திராவிடப் பாரம்பரியத் தெய்வங்கள் ( இவர்களிற் பெரும்பாலோர் பெண் தெய்வங்கள் ), மாரியம்மன், காளியம்மன் முதலியவர்கள் இவர்களுள் அடங்குவர். (2) மலையின மக்களின் தெய்வங்கள் ( பிராணேசுவரி இலை உடை தரித்த ஜீவாங்கு மலையினரின் தெய்வம். கதிராபதி, ஸ்தம்பேஸ்வரி போன்ற தெய்வங்களும் மலையினத் தெய்வங்கள் தாம் ). (3) தெலுங்கர், கன்னடியர்கள் முதலிய பிற மொழி பேசுவோர் நாடு பெயர்ந்து தமிழகத்திற் குடியுறைந்ததால், அவர்கள் வாழ்ந்த முன்னூர்த் தெய்வங்

களைப் புதிய ஊரிலும் நிறுவியது. (4) அவ்வப்போது எழும் தெய்வ இயக்கங்களையொட்டிப் புதுத் தெய்வங்கள் தோன்றுவது (அய்யப்ப வணக்கம்), (5) இறந்து பட்ட வீரர்களை நினைவு கூரும் தெய்வங்கள், (6) துறவிகளின் சமாதிகள், (7) மணமாகாத கன்னிப் பெண்களின் சமாதிகள், (8) நோய் நொடி நீக்குதல், விளைவைப் பெருக்குதல், மழை வருவித்தல், கன்று காலிகளைக் காத்தல் முதலிய ஊர்த்தேவைகளை நிறைவேற்றும் தெய்வங்கள் என்று பல, ஒவ்வொரு ஊரிலும் உருவெடுத்துள்ளன. சில நிலையான மாடங்களைப் பெற்றுள்ளன. சில கொடை, படையல் முதலிய நடக்கும் நாட்களில் மட்டும் தோற்றம் பெறுகின்றன. ஒவ்வொரு ஊரிலும் சாதிக்கொரு, தெருவுக்கொரு, சிலபொழுது வீட்டுக்கொரு தெய்வம் இடம் பெற்றிருப்பதைக் காண முடியும்.

சுருக்கமாகக் கூறினால் ஊர்த் தெய்வ வழிபாடு உயர் மதத் தாக்குதலால் நிலையிழக்காமல் இன்றும் செல்வாக்குப் பெற்றுள்ளது. இந்தச் செல்வாக்கைத் தமது மதப் பரப்பிற்கு அனுசரணையாக உயர் மதங்கள் மாற்ற முயன்றுள்ளன. மாரியம்மன், காளி முதலிய தெய்வங்களைச் சிவன் மனைவியாகிய பார்வதியின் மாற்றுருவாக இணைத்தனர். ஊர்த் தெய்வங்களிற் பெரும்பாலானவற்றையும் பெருந் தெய்வங்களோடு தொடர்புபடுத்தினர். இத்தகைய இணைப்பு முயற்சி ஓரளவுதான் வெற்றி பெற்றது. உயர் மதத்தினரும் ஊர்த் தெய்வங்களை வழிபட்டனர். அங்கு நடக்கும் வழிபாட்டு முறைகளை விழாக்களாக மாற்றினர். விநாயகர் வழிபாடு பெருங் கோயிலிற் காணப்படுவது போன்று ஊர் மரத்தடியிலும் பிள்ளையாராக ஊர் மக்கள் வணங்கினர். கோயிலிற் பிராமணப் பூசாரி வழிபாடு நடத்தினால், ஊரில் பிராமண ரல்லாத உயர் சாதியினர் நடத்தினர். வடகரைத் தெய்வம் ஊர்த்தெய்வமாக மாறியுள்ளதற்கு விநாயகர் தக்க எடுத்துக்காட்டு. முன்னர் வேலன் வழிபாடு முருக வழிபாடு ஆகியவற்றில் மறிபறுத்தல் இடம்பெற்றிருந்தது. இப்போது ஊர்ப்புறத்தில் உயிர்ப்பலி இல்லை. பிராமணத் தெய்வமாக வேலன் வழிபாடு மாறியுள்ளது. ஊர்த் தெய்வம் வடகரைத் தெய்வ வழிபாட்டைப் பெற்றமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. காளி, துர்க்கை முதலிய வழிபாட்டிலும் உயிர்ப்பலி குறைந்து விட்டது; ஆனால் அகற்றப்படவில்லை. தாழ் மட்ட மக்கள் இன்றும் இம்முறையைக் கையாள்கின்றனர்.

இறுதியாக மத வழிபாட்டில் கோயிலைச் சார்ந்த உயர்நெறி, ஊர்த் தெய்வத்தைச் சார்ந்த தாழ்நெறி என இரண்டாக வகைசெய்ய முடியும். இணைப்பு முயற்சியால் உயர் தெய்வங்களோடு ஊர்த் தெய்வங்கள் உறவு முறை பெற்றன, ஊர்த் தெய்வ வழிபாட்டில் உயிர்ப்பலி குறைந்துள்ளது. எனினும் தென்னகத்தில், குறிப்பாகத் தமிழகத்தில் ஊர்த்தெய்வ வழிபாடு, மக்கள் மதப் பிடிப்பில் மதவாழ்வில் பெருஞ் சக்தியாக இன்றும் இயங்கி வருகிறது.


உயர் மட்டத் தெய்வங்கள் மிகப்பலவும் வடகரைத் தெய்வங்கள்; ஊர்த் தெய்வங்கள் அனைத்தும் தென்கரைத் தெய்வங்கள். வடகரைத் தெய்வங்களோடு இணைக்கும் முயற்சி நடந்தாலும் முற்றிலும் வெற்றி பெற்றுள்ளது என்று கூறவியலாது.

ஊர்த் தெய்வ வழிபாட்டு நெறி, இந்து மதத் தத்துவ அமைப்பில் தனித்தே இயங்குகின்றது. அதன் நோக்கும் போக்கும் வேறாக இருக்கின்றது. அதனை மத வரலாற்றிலும் தத்துவ அமைப்பிலும் புறக்கணிக்க இயலாது.

## எழுதப் பயன்பட்ட நூற்கள்


1. **Henry Whitehead** : The village Gods of South India, COSMO Publications, New Delhi, 1983.
2. **Gilbert Slater** : The Dravidian Elements in Indian culture, Asian Publishers, Reprint New Delhi, 1982.
3. **R. N. Nandi** : Religious Institutions and Cults in Deccan, Motilal Banarasi Dass, Delhi, 1973.

## பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா — 1984



உரையாற்றுபவர் : பேராசிரியர் த. நடராஜா (பல்கலைக்கழக வேந்தர்)

வலமாக நிற்பவர்கள் : பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம்
(துணைவேந்தர். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.)
பேராசிரியர் கா. இந்திரபாலா (கலைப்பீடாதிபதி)

பின்வரிசையில் : பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் க. தெய்வேந்திரராசா

இடமாக நிற்பவர்கள் : பேராசிரியர் சு. வித்தியானந்தன் (பல்கலைக்கழகத் துணைவேந்தர்)
திரு. வே. ந. சிவராசா (பதிவாளர்)
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (மருத்துவபீடாதிபதி)


UNIVERSITY OF JAFF
RECEIVED
1986-10

சென்றபொழுது அவரும் உடன்சென்று, செயலாளர் என்ற நிலையில் வெற்றியும் புகழும் ஏற்படப் பெரிதும் முயன்றார். அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் சேர். பொன். இராமநாதன் செல்வி R. L. ஹரிசனைத் திருமணஞ் செய்தார். இனத்தால் மதத்தால், மொழியால் வேறுபட்ட செல்வி R L ஹரிசன் சைவப்பெண்மணி யாக, எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கித் தமது கணவனுடைய கோட்பாடுகளை மிகநுணுக்கமாகப் பின்பற்றி வாழ்ந்தார். அன்பு, பணிவு கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி என்பன அவரிடம் காணப்பட்ட சிறப்பியல்பு களாகும். சேர். பொன். இராமநாதனின் பாரிய திட்டங்களைச் செயற்படுத்துவதி லும், கல்வி நிலையங்களை நிர்வகிப்பதிலும், விருந்தினரை உபசரிப்பதிலும், கலைகளை வளர்ப்பதிலும் மக்களை அன்பாகவும் பண்பாகவும் நடத்துவதிலும் இவர் நிகரற்று விளங்கினார்.

சேர். பொன். இராமநாதனால் 1924-ம் ஆண்டு தொடக்கப்பெற்ற சைவ மங்கையர் சபையின் தலைவராக அவர் ஆற்றிய பணிகள் அளப்பில. சைவப் பெண்களுடைய உயர்ச்சிக்காக அமைக்கப்பட்ட இச்சபை இன்றுவரை நற்பணி ஆற்றிவருவது வரவேற்கத்தக்கது. லேடி இராமநாதனுடைய பலதரப்பட்ட பணி களைப் பாராட்டி அவருக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்னாருடைய பணிகளை நினைவுபடுத்துமுகமாக சைவ மங்கை யர் சபையினர் இரு அறக்கட்டளைகளை நிறுவியுள்ளனர். இந்து நாகரிகத்தில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்குத் திறமை அடிப்படை யில் ஒரு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. மேலும் வருடந்தோறும் இந்து நாகரிகம், சமய தத்துவம், கலை, கலாசாரம் ஆகியதுறைகளில் ஒரு நினைவுப் பேருரை நடைபெற நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நினைவுப் பேருரை 1981-ம் ஆண்டில், பேராசிரியர் கலாநிதி பா. நடராஜன் அவர்களாலும், 1984-ம் ஆண்டில், பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களாலும் நிகழ்த்தப் பட்டது. பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரை நடைபெறச் சைவமங்கையர் சபைத் தலைவர் திருமதி இரத்தினா நவரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை என் றும் பாராட்டப்படவேண்டிய தொன்றாகும்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

செயலாளர்,
சைவ மங்கையர் சபை.



கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிற் பிரதேசத்தின் வடசேரியில் 1926 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் நாள் பிறந்த பேராசிரியர் சுப்பிரமணியம் வடசேரி எஸ். எம். ஆர். வி. இந்து உயர் நிலைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைப்பெற்று, நாகர் கோவில் ஸ்கொற் கிறீஸ்தவ கல்லூரியில் படித்து, பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் கல்விபயின்று 1946 இல் தமிழ் மொழியியல் முதுமாணிப் பட்டம்பெற்றார்.

1947 இல் தமிழ்நாடு திருநெல்வேலி இந்துக்கல்லூரியிலே தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றுத் தமது கல்விசார் வாழ்க்கைப் பணியை ஆரம்பித்த இவர், தொடர்ந்து திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்திற் (கேரளத்தில்) கௌரவ தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றினார். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளைக்குப் பின்னர், அப்பல்கலைக்கழகத்திலுள்ள அழகப்பச் செட்டியார் நன்கொடைப் பேராசிரியத்தவிசினை 1954இல் இவர் ஏற்று தமிழிலக்கிய ஆராய்ச்சிக்கு வேண்டிய அறிவியல் பூர்வமான மொழியியற் பயில்வுத்திறனை நிறுவினார். அக்காலத்தில் ரொக்பெல்லர் நிறுவனத்தின் உயர்புலமைப் பரிசில் பெற்று அமெரிக்காவிலுள்ள இந்தியானாப் பல்கலைக் கழகத்தில் மொழியியலிற் கலாநிதிப்பட்டம் பெற்று, 1958 இல் நாடு திரும்பியதும் கேரளப் பல்கலைக் கழகத்தின் தமிழ், மொழியியல் துறைகளின் தலைவராக ஆயினார்.

அறுபதுகளில் சர்வதேச அறிஞர்களுடைய கவனத்தைத் திராவிட மொழியியலின்பால் ஈர்க்க உதவிய இயக்கத்தின் முன்னணியில் விளங்கிய பேராசிரியர் சுப்பிரமணியம் தமது முயற்சிகளின் விளைவாகத் திராவிட மொழியியற் கழகம், திராவிட மொழியியலுக்கான சர்வதேச சஞ்சிகை, திராவிட மொழியியலுக்கான சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றைத் தொடக்கி, திராவிட மொழியியலின் வளர்ச்சியிற் பெரும் முன்னேற்றத்தை நிலைநிறுத்தியுள்ளார். இந்தியப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இன்று திராவிட மொழியியல் சிறப்பிடம் பெற்றிருப்பதும், மொழியியல் அறிஞர்கள் இந்தியப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றிலே மொழியியற் பேராசிரியர்களாக இருப்பதும், இவருக்குப் பெருமை தேடிக் கொடுப்பனவாகும். திராவிட மொழியியல் என்னும் வானத்தில் முழுமதி என விளங்கும் இப்பேராசிரியர், பெருந்தொகை நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

தஞ்சாவூரில் அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக விளங்கும் இவருக்கு, இவரது புலமை மிகு ஆய்வுகளுக்காக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1934 ஆம் ஆண்டு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

ஆர் எஸ் அச்சகம், யாழ்ப்பாணம்.